உ

கடவுள் துணை.

திருப்பதி ஏழுமலையான் சாக்ஷிசொன்ன

வேடிக்கையின்
சிந்து.



இஃது - குளா,

கோவிந்தசாமி நாயகரால்

இயற்றப்பட்டது,

சென்னை:

ஸ்ரீ சுப்ரமணியவிலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

நெ, 28 வடமலைமேஸ்திரி தெருவு சென்னை, 8-11-15

திருப்பதி ஏழுமலையான்

சாட்சிசொன்ன வேடிக்கையின் சிந்து.

விருத்தம்.

திருப்பதிவெங்கடேசர் திருமாலும் பக்தனுக்கு
பொருத்தமாய்கோர்ட்டில்வந்து புண்ணியன்சாக்ஷிசொன்ன
அற்புதசிந்தையாலும் அகிலத்தோர்காணவேதான்
பொற்பாதம்போற்றிசெய்து பாலகன்யெழுதினேனே.

செட்டியார்வாங்கின தொகையைகொடுத்த

நொண்டிச்சிந்து.

வருஷம் விரோதிகிருதில்-நல்ல வைகாசிமாதமதில் வளர்பிறை யில்-இருபத்திஐந்தாந்தேதி புதவாரம்யேழரைமணிக்குபணம் சீருடனுக வட்டியும்முதலும்யெடுத்து அதைவகையாக மூட்டைகட்டி யெடுத்துக்கொண்டு - காசீம்சாகிப்புயிடம் இதைகாதரைய் அளித்திடுவோம் என்றுநினைத்து-நல்லப்பசெட்டியவன் வீட்டிற்கு நாணயமுடனவன்வருகையிலே-இருந்தார் திண்ணைமீதில் காசிம்சா யித்தனைநாளாய் செட்டியார்-வரவில்லையே என்றுமவன் கேட்கையிலே செட்டியார் எடுத்துவந்தேன்மூட்டையைபிடித்துக்கொள்ளு-என்றுசொல்லியிருவருமாய் அங்கு இரக்கிவைத்தார் வெகுநாட்டமுடனே பிரித்தார்பையதனை இருவரும் பேசியேகணக்குதனை தானுரைத்தார்-பார்த்தார்செட்டியாரும் யான்பட்சமுடன் வாங்கியதோர் இரண்டாயிரம் வட்டியும்முதலுங் கொடுத்தேன் - உமக்கெமக்கும் வழக்கொன்றுமில்லாமல் தீர்த்துவிட்டேன் - போய்வாரேனென்றுசொல்லி செட்டியார் போனவிடம்தெரியாமல் வீடுவந்தார். தந்தின

இ-ம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி-பல்லவி.

அற்புதம்பாரீர்—யேழுமலையான்சொன்ன
அதிசயம் கேளீர்

அநுபல்லவி.

அற்புதம்பாரிந்த அகிலத்திலுள்ளோரே
நற்சாட்சியாகவே நாதன்கோர்ட்டில்சொன்ன அற்

சரணம்.

ஆயிரத்திதுலாயிரத்தி அதிநொராம்வருடத்தில்
அடுத்தஅக்டோபர்மாதம் பதிநாரம்தேதியில்
நேயமான் திங்கள் மணியோபத்திரைதன்னில்
நேர்ந்தகாக்கினுடா கோர்ட்டினில்பகவானும்

வருகுறார்பாராய்—பக்தன்நல்லப்பசெட்டி
துதிக்குறார்சீராய்

கொடுத்ததோர்ரூபாயை கோர்ட்டில்மோசஞ்செய்ய
கூடிகும்மஸ்தாவை நாடிமனதைதேர்த்த
மருநாள்காசீம்சாயபு காலைவீடிவர்வர
மரந்திட்டேன்பத்திரம் தருவீர்கொண்டுபோக
யென்றுகேட்டானும்—காசீம்சாயபுஅப்போ
நின்றுரைப்பானும்

நானேகொடுத்தரூபா யிரண்டாயிரத்தையும்
நலமாகஅளித்திட்டால் சொல்லுவேன்கணக்கையும்
வேண்டிவாங்கிபோன விபரீதவட்டியும்
விரைவாய்கொடுத்துவிட்டால் தருவேநுன்பாண்டையும்
கூச்சலிடாதே—நான்சொன்னவார்த்தையும்
குறிப்பாய்கேட்பாயே

யென்றுகாசீம்சாயபு இவரிடம்சொல்லவே
இருகண்ணில்ஆனந்த கண்ணீர்விட்டழுகவே
கோழைமனதுடனே கூச்சலுமிடுகவே
கொடுப்பேன்சம்மனென்று சாயபும்உரைக்கவே
நின்றுவிட்டானும்—நேர்மையாய்பகவானை
நினைந்துக்கொண்டானும்

கோர்ட்டுசம்மன்செய்து குறிப்பாய்கூட்டிவந்தார்
குணமாய்மாஜிஸ்ரேட்டு யெதிரினில்நிருத்திட்டார்
வாக்குமூலத்தையும் வகையுடன்கேட்டிட்டார்
வம்பானவார்த்தையும் சாயபும்வுரைத்திட்டார்
பார்த்தானேசெட்டி—பகவானை மனதினில்
தியானிப்பார்மட்டி செட்டியார்

அரிஅரிகோவிந்தா அன்பாய்வுரைக்குரேனே
அவனும்கொடுத்தரூபா யானும்அளித்திடானே
வம்பானவார்த்தையை வகையாய்புரிந்திட்டானே
வார்த்தைக்குமனம்வைத்து வருவீர்கோட்டினில்தானே
யென்றுமேதுதிக்க—பகவான்ஆனந்தங்கொண்டு
நின்றிட்டார்மருக்க

(வ-ம்.) செட்டியார் கொடுத்ததுகையை காசீம்சாயபு கோர்ட்டில்யில்லையென்று சொல்லவும் மெய்யன்போடு பகவானைதுதிக்கும்.

விருத்தம்.

மண்ணுலகம்விண்ணுலகம் வாழ்வையெல்லாம்நாம்மரந்து
அன்னவரின்பாதத்தை அடிபணிந்தால்கதிபெரலாம்

யென்றுசொல்லிசெட்டியவன் யேழுமலையானையுமே
நின்றுதுதிசெய்வான் நிகழ்த்தி

ஐயோ என் ஜானகியை என்ற வர்னமெட்டு.

இராகம் தேசிக முகாரி-தாளம்-ரூபகம்-கண்ணிகள்.

கரிவரதா கோவிந்தா கருணாகர முகுந்தா
கரியேந்திர வைகுந்தா கேட்கும் வரந்தருவாய்
கிருஷ்ணா! கிருஷ்ணா! கிருஷ்ணா!
சுந்தரசற்குணசீலா தோகையசோதைபாலா
அந்தரர் துதிகோபாலா அண்டினேன் எனையாளுவாய்
ஹரியே! ஹரியே! ஹரியே!
தாமரைமலர்பாதா தயங்கச் செய்யாதேசீதா
ராமாதுதி போதாதா ரக்ஷிக்கத் தடையேனோ
ரங்கா! ரங்கா! ரங்கா!

(வசனம்.) இப்படியாய் பகவானை செட்டியார் துதிக்கையில் யெங்கும் நிரைந்த பராபரவஸ்துவாயிருக்கும் பரஞ்சோதியாகிய பெருமாள் சாட்சி சொல்லுகிற, கீர்த்தனை.

இராகம் தேசிக முகாரி-தாளம்-ரூபகம்-கண்ணிகள்.

மன்னன்காசிம்சாயபு சொன்னபடியேநீரும்
முன்னேமோசக்காரனாய் பண்ணிநீர் தண்டனை தானும்
பக்த்தா! பக்த்தா! பக்த்தா!
செட்டிகொடுத்ததுகை சிராயான்பார்த்திருந்தேன்
வட்டியும்முதலோட வகையுடன்தந்திட்டான்
பக்த்தா! பக்த்தா! பக்த்தா!
நல்லப்பசெட்டியவன் சொல்லமனம்வராமல்
யெண்ணியெனை துதிக்க வுன்னதமாயான்வந்தேன்
பக்த்தா! பக்த்தா! பக்த்தா!
சூனைகோவிந்துசாமி சூட்சமாய்யெழுதினான்
பாலன்மனக்குறைபோய் பார்த்தால்தெரியலாமே
பக்த்தா! பக்த்தா! பக்த்தா!

இப்படியாய் பகவான் நேரில் சாக்ஷி சொல்லவும் ஜட்ஜி ஆனந்தங்கொண்டு துதிக்கும் கீர்த்தனை.

இராகம் இந்துஸ்தான் தோடி-அடதாளம் சாப்பு.

கண்ணிகள்.

அச்சுதாவுந்தனை யிச்சையாய்போற்றினேன் லட்சுமியுடன்கூடி
வுச்சிதப்பட்சமி திட்சணமேராயோ [சயமாய்
முகுந்தா யென்தன்முன் வாராயோ ஓ! ஓ! பச்சைவண்ணா நிட்
பட்சம்வைத்து வச்சனை காராயோ

வாலிவயதுள்ள வேலைவிழிமாதர் லீலையிற்பட்டுவுன் காலடிநம்பாமல்
ஆலைக்கரும்பானேன் ஆண்டவா அலைகடர்
துரும் பானேன் இப்போ
காலையிலும் மாலையிலும் வேலைமிட்டுசிலா வுன்னருள்காணேன்

தஞ்சம்நீயேயென்று அஞ்சலிசெய்திடும் பஞ்சவர்கட்கன்று
சஞ்சலங்கள்தீர்த்த ரஞ்சிதன் நீயல்லவோ [சகத்திற்
யெடுத்தின்னம்ஞாயங்களைசொல்லவோ ஐயாமிஞ்சுமெமன்வஞ்
கஞ்சியாகிலும்கெஞ்சிபின்னேசொல்லவோ

காட்டானைமுன்னோடி கேட்டவரந்தந்த தாஷ்டீகாயென்முறை
நீட்டியுரைத்தும் பாராட்டத்தரமாமா [ருள்
இனிவிடமாட்டேன் பரந்தாமா முந்தியாட்டும் நிலையோட்டிய
ஊட்டிமுக்தி காட்டுவாய் சீதாராமா

இ-ம், நாதநாமக்கிரியை.

கோர்ட்டில் இருந்தவர்கள் கூட்டமாய்போனார்கள்
கூடியேசாயபு வீட்டையும்புகுந்தார்கள்
வாட்டமாய்பெட்டியை திறந்துமேபார்த்தார்கள்
வகையுடன்பாண்டையும் பணத்தையும்யெடுத்தார்கள்
இதுவல்லோசாட்சி—பகவான் கலியுகத்தில்
சொன்னதேகாட்சி வுடனே

கோர்ட்டின்ஜட்ஜியவர் குறிப்பாகயோசித்தார்
குணமாய்வெங்கடேசர் சாட்சியைபூசித்தார்
மேட்டிமைகாசீனை கோர்ட்டில்வரவழைத்தார்
மிகவும் தீரனென்று லாயரும்வுரைத்திட்டார்
வந்துதேகோபம்—வருத்தத்தால்ஜட்ஜியும்
வுரைப்பாரேபாபம் அப்போ

கேசைஆரம்பிக்க கண்டுஜெனங்கள்பார்க்க
கிட்டிருந்தசெட்டி குற்றவாளியைநோக்க
பாதகன்கேசையும் பண்பாவுரைத்துதாக்க
பட்சமுடனேசெட்டி பகவானைதியானிக்க
ஜட்ஜியும்கண்டு—ஆனந்தமிவர்கொண்டு
சிரித்தாரேஅன்று வுடனே

ஜட்ஜிகளும்கேசையும் சரியென்றுகேட்கையில்
சங்கரனருளாலே யிருள்வந்துபூர்க்கையில்
முத்திலும்கேசையும் முனைந்துமேசேர்க்கையில்
முடிப்பேன்ஜட்ஜிமெண்டைகொடுப்பேன்தீர்ப்பையென்று
யெழுந்தாரேஜட்ஜி—காசிம்சாவுக்குபயம்
புகுந்துதேபொந்தி

இப்படிதப்பிதம் யென்னிடம்வுரைத்தேதானே
இடுவேன்சிறையிலென்று மனமுங்கலங்கிதானே
வொப்பியேஜட்ஜியும் வுண்மைதெரிந்துமானே
வுனக்குதான் அபராதம் ஐநூர்ரூபாய்தானே
கொடுத்தேதன்யென்தீர்ப்பு—காசிம்சாயபுக்கு
அளித்தேதன்யென்வாக்கு வுடனே
சொல்லிவாய்மூடுமுன் சூழ்ந்திட்டார்வெகுபேர்கள்
சுருக்காய்பணமெடுத்து கட்டினார்சிலபேர்கள்
அன்புடன்காசிமை அழைத்தார்கள்பலபேர்கள்
அவரவர்வீடுபோய் சேர்ந்தார்சாயபுமார்கள்
அற்புதம்பாரீர்—யேழுமலையான்சொன்ன
அதிசயம்கேளீர்

கும்மி.

மாதுளம்பூநிறமேனிப் பெண்ணேயெந்தன்
மனதுக்கிசைந்திடும் பூமயிலே
வோதுவேன்கலியுக வேடிக்கைசிந்தையும்
வுத்தமியேநீயும் கேட்பாயடி 1

நல்லப்பசெட்டியார் கைதனில்வாங்கின
நலமுள்ளபணத்தை கோர்ட்டில்வந்து
மெய்யெனய்யாக்கவந்த மன்னன்காசிம்சாயபு
முழித்துதவித்ததை கேளுங்கடி 2

வாங்கினபணத்தை யில்லையென்றுகோர்ட்டில்
வழக்குகள்செட்டிமேல் தானெடுக்க
வேண்டியேதிருப்பதி வெங்கடேசன்வந்த
வேடிக்கைசொல்லுவேன் கேளுங்கடி 3

கோர்ட்டின்முன்பாகவே நிர்க்கவைத்தார்ஜட்ஜி
கூசாமல்வாக்கையும் கேட்கலுற்றார்
காசிம்சாயபையும் கண்டழைத்தால்இவர்
காணவேயில்லையென் றேயுரைத்தார் 4

இப்படிசாயபு தர்க்கித்துபேசவே
யெண்ணிமனம்நொந்து ஆண்டவனை
பொர்ப்பாதம்துதித்து போற்றிசெய்தான்செட்டி
பட்சமாய்கோர்ட்டினில் வந்துநின்றார் 5

செட்டியார்வாங்கின தொகைகளைசாயபு
சிருடன்கணக்கை தான்பார்த்து
வுத்தமனிடத்தில் வட்டிமுதலோட
வுண்மையாய்வாங்கினார் நிட்சயமே 6

கோர்ட்டினில்பகவானும் சாட்சியும்சொல்லவே
கும்பலாய்கூடி ஜெனங்களெல்லாம்
ஆச்சர்யமென்று சாயபுவீட்டையும்
அன்பாய்வந்து நுழைந்தனரும் 7

ஏழுமலையானும் சொன்னதைபோலவே
இரும்புகஜானாவை திரக்கவைத்து
சேவியே ஆவலாய் பார்க்கும்போதுபண
மூட்டையிருந்துதாம் நேசர்களே 8

பத்திரம்பெட்டி யிதுவோயென்றுகோர்ட்டில்
பார்த்தஜெனமெல்லாம் கூடிக்கொண்டு
யெத்தாகதிரந்து பார்க்கும்போதுமுந்தி
இருந்துதாம் பாண்டுமேபெட்டியிலே 9

பாண்டும்பணத்தையும் தானெடுத்துஜட்ஜி
பட்சமாய்கோர்ட்டினில் கொண்டுவந்து
வேண்டியேசெட்டிமேல் சம்மனெடுத்தவனை
விரைவினில்கொண்டுவா வென்றுரைத்தார் 10

சொல்லிவாய்மூடுமுன் இனிஸ்பெக்டர்யேட்டுடன்
சுருக்குடன் காசியை கொண்டுவந்து
மெள்ளவேபாரில் நிருத்திவிட்டுஜட்ஜி
மேவும்அபராதம் தானுரைப்பேன் 11

ஆங்கிலேயர்கள் அரசாங்கம்தன்னிலே
அக்ரமமோசங்கள் செய்ததினால்
யேங்கியே ஐநூறுரூபாய்அபராதம்
இட்டேனென்றுஜட்ஜி தானுரைத்தார் 12

ஜட்ஜிமெண்டையுமே தானுரைத்தார்சாயப்
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்
பையையெடுத்து அபராதம்கட்டிட்டு
பட்சமாய்வீடுபோய் சேர்ந்துவிட்டார் 13

நீதியைசற்றும் நினையாமலவர்
நேயத்தையாயினும் பாராமல்
பேதமையாய்பணத் தாசையினாலிந்த
பேருலகெல்லாம் வகையாச்சே 14

காட்டிக்கொடுத்தவர் தூரவிலகவும்
கலகஞ்செய்தவர் நாமனென்று
மாட்டிக்கொண்டு கோர்ட்டில்கேசுநடந்ததை
மன்னன்கோவிந்தன் எழுதிவிட்டான் 15

ஜர்ஜி ஏழுமலையானைத் துதித்துக்கொண்டு திருப்பதிக்கு வருகிற

ஆனந்தக்களிப்பு.

திருப்பதிவரத்துணிந்தேனே - உந்தன்
திருநாமமந்திரம் ஜெபித்துக்கொண்டேனே

கொடிகட்டிகொண்டெழுகோடி - தனங்குவித்தந்த
மகிட்சியாய் கூத்துகளாடி
கெடுபுத்தியுடையோரைகூடி - யானுங்
கெட்டலையாமலே கதிபெறநாடி திருப்

நற்பூச்சந்தனமத்தர்பூசி - மிக
நன்றாகவைத்தாலும் நாற்றமேவீசி
எப்போதும்கொடுமைசெய்தோஷி - என்றே
இவ்வுடல்வாழ்வுகள் யாவையும்வீசி திருப்

மாளிகைமேல்வீடுகட்டி - மனைவாழ்வை
நிலையென்று வாழ்கின்றமட்டி
நாளையேமன்வந்துதட்டிக்கொண்டு
நடப்பானென்றறியானை அடுப்பதைவெட்டி திருப்

பட்டும்பணிகளும்பூண்டுகொண்டு
பாழானவாழ்வினை பலனென்னஆண்டு
கெட்டவர்களைகண்டுமீண்டு - கதி
கிடைக்கும்படிக்கு நடப்பதற்கீண்டு திருப்

திருப்பதியுயர்ந்ததுபக்தி - ஸ்ரீராமனை
துதிப்போர்க்கு வருகுமே முத்தி
சிரியன்கோவிந்துகவிசித்தி - இதை
தெளிவாய்தெரிந்தவர்க்கு கிடைக்குமேமுத்தி திருப்

முற்றிற்று.